மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
பல்லாவரம்

**E.A.01/2023**
**E.P.131/2023**
**Old no.86/2018**
**PW 1**

இந்நீதிமன்றத்தில் கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. சுரேஷ் | மதம் | : |
| தந்தை/கணவர் பெயர் | : திரு. சுப்பையன் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

<u>முதல் விசாரணை</u>

23.05.2002-தேதியில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் மனு சொத்தை பொறுத்து ஏற்படுத்திக் கொண்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்த பத்திரம் (எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ. 1 பதிவு செய்யப்படவில்லை என்றும் அதற்கான உரிய கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது). ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரரின் அசல் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலுத்தி வந்த இந்தியன் வங்கி சலான் மூலம் 2005-முதல் 2013 வரை செலுத்தி வந்த வாடகை தொகை

ரசீதுகள் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிர்மனுதாரருக்கு செலுத்தவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலுத்தி வந்த இந்தியன் வங்கி சலான் மூலம் 02.10.2013-முதல் 01.12.2021 வரை செலுத்தி வந்த வாடகை தொகை ரசீதுகள் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிர்மனுதாரருக்கு செலுத்தவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மனு சொத்து குறித்து மின் கட்டண பட்டியலுக்கான அட்டை அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனு சொத்தை குறித்து மின் கட்டணம் செலுத்தி வந்த ரசீதுகள் (3 எண்ணிக்கை) ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.